©
தமிழ்நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 45] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 26, 2014
கார்த்திகை 10, ஜய, திருவள்ளுவர் ஆண்டு – 2045

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை நிலை எண் 22, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (B1)த் துறை, நாள் 25 பிப்ரவரி 2013.]*

***நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் (நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சரகம்), ஆணை, புதுடில்லி, 20 டிசம்பர் 2012.***

**S.O. 2968(E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, 2002ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு அளவுகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணைக்கு மேலும் திருத்தம் வழங்கிக் கீழ்க்காணும் ஆணைகளை பிறப்பிக்கிறது. அதாவது:—

1. *(1)* இந்த ஆணை சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு அளவுகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் (இரண்டாவது திருத்தம்) ஆணை 2012 என அழைக்கப்படும்.

*(2)* இந்த ஆணை ***அரசிதழில்*** வெளியாகும் நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பின் செயலுக்கு வரும்.

*(3)* இது இந்தியா முழுமைக்கும் பொருந்தும்.

2. 2002ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு அளவுகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணையின் 7–ஆம் பகுதியினைச் சேர்ந்த துணைப்பகுதி (1)–இல் (iii)–வது இனத்திற்குப் பதிலாகக் கீழ்க்காணும் இனத்தை அமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது:—

"(iii) நெல் மற்றும் அரிசிக்கு இந்த ஆணை செயலுக்கு வரும் நாளிலிருந்து 30, நவம்பர், 2013 வரையில், அந்த நாள் உட்பட உள்ள காலமாகும்."

[F.எண். 10/1/2006-ECR&E]

**பங்கஜ் அக்ரவாலா,**
*செயளாலர்.*

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி மீளவெளியிடப்படுகிறது)

**எம்.பி. நிர்மலா,**
*அரசுச் செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை நிலை எண் 208, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (B1)த் துறை, 19, டிசம்பர் 2013.]*

***நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் (நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சரகம்), ஆணை, புதுடில்லி, 29 டிசம்பர் 2013.***

**S.O. 3543(E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, 2002 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு அளவுகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணைக்கு மேலும் திருத்தம் வழங்கிக் கீழ்க்காணும் ஆணைகளை பிறப்பிக்கிறது. அதாவது:—

1. *(1)* இந்த ஆணை சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு அளவுகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் (இரண்டாவது திருத்தம்) ஆணை 2013 என அழைக்கப்படும்.

*(2)* இந்த ஆணை ***அரசிதழில்*** வெளியாகும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2002 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு அளவுகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணையின் 7–ஆம் பகுதியினைச் சேர்ந்த துணைப்பகுதி (1)–இல் (iii)–வது இனத்திற்குப் பதிலாகக் கீழ்க்காணும் இனத்தை அமைத்துக்கொள்ளவேண்டும் அதாவது:—

"(iii) நெல் மற்றும் அரிசிக்கு 30, நவம்பர் 2014 வரையிலான காலமாகும்."

[F.எண். 10/1/2006-ECR&E]

**டாக்டர் கே.ஜி. ராதாகிருஷ்ணன்,**
*பொருளாதார ஆலோசகர்.*

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி மீளவெளியிடப்படுகிறது)

**எம்.பி. நிர்மலா,**
*அரசுச் செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை நிலை எண் 76, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H1)த் துறை, 27 ஆகஸ்ட் 2014.]*

***நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் (நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சரகம்), ஆணை, புதுடில்லி, 3 ஜூலை 2014.***

**S.O. 1685(E).**—1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 2002ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணைக்கு மேற்கொண்டு திருத்தம் வழங்கிக் கீழ்க்காணும் ஆணைகளை, மத்திய அரசு இதனால் பிறப்பிக்கிறது. அதாவது:—

1. *(1)* இந்த ஆணை சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் (திருத்தம்) ஆணை 2014 என்று அழைக்கப்படும்.

*(2)* இந்த ஆணை ***அரசிதழில்*** வெளியாகும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2002 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் நுகர்வுக் கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணை (இதற்குப் பின்னர் மேற்சொன்ன ஆணை எனக் குறிப்பிடப்படும்) யின் 3–ஆம் பகுதியில் மோட்டா ரகத் தானியங்கள் என்ற வார்த்தைகளுக்குப் பின் "வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு" என்ற சொற்கள் சேர்க்கப்படவேண்டும்.

3. இந்த ஆணை செயலுக்கு வரும் நாளிலிருந்து ஓராண்டு காலத்துக்கு வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய பண்டங்களுக்கு மேற்சொன்ன ஆணை செயல்நிறுத்தம் செய்யப்படும்.

**4.** மாநிலத்துக்கு வெளியே உள்ள இடங்களுக்கு வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் போக்குவரத்து, விநியோகம் அல்லது விற்பனையை இந்த ஆணையிலுள்ள எதுவும் பாதிக்காது என்பதுடன் இந்த பண்டங்களை இறக்குமதி செய்வதற்கும் பொருந்தாது:

எனினும், மத்திய மற்றும் மாநில அரசுகள், இறக்குமதியாளர்களை வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு இருப்புகளின் வரவினையும் அவர்கள் இருப்பு வைத்துள்ள விபரத்தினையும் அறிவிக்குமாறு அறிவுறுத்தலாம்.

[F.எண். **10/2/2014**-ECR&E]

**மனோஜ் பரிதா,**
*இணைச் செயலாளர்.*

**குறிப்பு :** முதன்மை ஆணை மத்திய அரசின் சிறப்பு வெளியீட்டு ***அரசிதழ்*** பாகம் II, **3—**ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (i)—ல் வெளியிடப்பட்டுள்ளது;

*காண்க:*— S.O. 517(E) **29** ஆம் நாள், ஜூன், **1999**, G.S.R. 104(E), **15** ஆம் நாள் பிப்ரவரி, **2002**, S.O. 1302(E) நாள் **25** ஆம் நாள், நவம்பர் **2004**, S.O. 1373(E), **29** ஆம் நாள் ஆகஸ்ட், **2006.**

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி மீளவெளியிடப்படுகிறது)

**எம்.பி. நிர்மலா,**
*அரசு முதன்மைச் செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.